எது நாம் செலுத்தும் மரியாதை..?

“உலக வரலாற்றில் பிரமிப்பூட்டும் சம்பவம் இருமுறை நிகழும். முதலில் துக்கமாயும் இரண்டாம் முறை நகைப்பிற்கானதாயும் ஆகிவிடும்”.. இவை 1852ல் பிரெஞ்சுப்புரட்சிக்குறித்த கார்ல் மார்க்ஸின் *18th Brumaire* கட்டுரையில் நெப்போலியன்களின் எழுச்சி வீழ்ச்சியை குறிக்கும் காலத்தை வென்ற சொற்கள். பிற்காலத்தில் கொரனா மறுபடியும்.. என்றால் நிச்சயம் அது நகைப்பிற்கானதாய்தான் இருக்கும். உயிரோ பொருளோ தனியாயோ சமூகமாயோ சுதந்திரமாய் எப்பொழுதும் வாழ்ந்ததில்லை. சமூகம் ஒரு தத்துவத்திற்கு அடிமையாய் நீடித்து வாழவேண்டுமானால் அதன் நிறுவனமயமாக்கல் சமூகத்தின் தொடர்தலைமுறைகளின் விருப்பத்தேர்வாய் அதன் மனதில் அத்தத்துவம் உறைந்திருக்க வேண்டும். மூன்று தலைமுறைகளால் போற்றப்பட்ட லெனின்,பெரியார் சிலைகள் உடைக்கப்படுகின்றன என்றால் உழைக்கும் ஏழைகளுக்கு பூவுலகில் சொர்கத்தைக்காட்டிய தத்துவம் தன் நிறுவனமயமாக்கலில் குறைபாடுடன் உள்ளது என்பதாகும்.ஆனால் விவரம் தெரிந்தலிருந்து,இறந்தபிறகு நரகமா,சொர்கமா என மனதை அலைக்கழித்திடும் மதங்கள் நிலைத்திருப்பது சமூகத்தின் தொடர்தலைமுறைகளின் விருப்பத்தேர்வாய் அதன் மனதில் மதம் உறைந்திருப்பதால்தான். லெனினுக்குக்கல்லறையில்லை. அங்கு பல ஆண்டுகள் தேவ ஆலயங்கள் மக்கள் கூடாத இடமாகின.புரட்சியில் கன்.ஃபூசிய பிராமணத்தை துடைத்தெறிந்தது போல் பெரும்பாண்மை சீனர்களின் தவோ மதத்தை அகற்றும் மாவோவின் பணி இன்னும் நிறைவடையவில்லை.எழுதுவது மட்டுமே வரலாறு இல்லை. அடிமை ஸ்பார்டகஸின் புரட்சி கிரேக்க,ரோமனிய புராதன மதங்களை மதிப்பிழக்கச்செய்து ஐரோப்பாவில் அடிமைகளை வைத்துக்கொள்ள அனுமதிக்காத கத்தோலிக்க சமயத்தை நிலைப்படுத்தியது. நெப்போலியன் ஐரோப்பாவை வென்றானென்றால் அவன் வாழ்ந்த காலத்தில் இன்னொருவன் தென்அமெரிக்க நாடுகளை வென்றான்.! சரித்திரம் அவனைக்கண்டுக்கொள்ளவில்லை.



*சைமன் ஜோஸ் அன்டோனியோ பொலிவர்.!*தென்அமெரிக்க நாடுகளில் செவ்விந்திய-ஆப்ரிக்க கலப்பின கத்தோலிக்க அடிமைகளை ஐரோப்பிய ரிடமிருந்து விடுதலை செய்வதே அவன் இலக்கு.அது நெப்போலியனுக்கு நேரெதிரானது..அங்கே கத்தோலிக்க சமயத்தின் மீது கம்யுன்...ஃபிடல், சேகுவேரா,சாவேஸ்-பொலிவரின் கூரிய வாள்கள்..நெப்போலியனின் வெங்கல சிலை உடைக்கப்பட்டது போல் சைமன் பொலிவரின் சிலை அங்கே உடைக்கப்படவில்லை. கூரிய வாளுடன் குதிரைமீது அமர்ந்திருக்கும் பொலிவர் இருநூறு ஆண்டுகளாய் தென்அமெரிக்க மக்கள் மனதில் இன்றும் வாழ்கிறார்.!

இந்துத்வா மீது கம்யுனா.? இஸ்லாத்தின் மீது..பழைய-புதிய-பெந்தகொஸ்த் கிறிஸ்த்தவத்தின் மீது..ஜைன்,புத்,சீக்கியம் மீது கம்யுனா.? ஒன்றிரண்டு கறைகளை வெளுப்பதே கடினம்.. பொலிவரின் எழுத்துக்களில் புரட்சி..சமுத்திரத்தை உழுவது..! நான்காயிரம் ஆண்டுகட்கு முன் மயிலை அன்போடு வளர்த்த ஒரு பெரிய இனக்குழு நாகர்கள்.அதன் மீது ஆரியம் உறைந்தது. ராமர் கோவிலுக்குத்தீர்ப்பு எழுதிய காலம் நாகர்கோயிலுக்கும் எழுதும்.! கடல்கொண்ட லெமூரியா மௌரியன்தான் என்பதையும் அறியும்..! யாகத்தீயின் உயிர்வதை தாங்காமல் ஆரியத்தின் மீது ஜைனம்.. பின் மகுடமாய் பௌத்தம்..! அசோகனின் பேரன் தத்தாவைஅரண்மனைக்கொலை செய்த பின்,எதிர்புரட்சி செய்து மீண்டும் அரியணை ஏறிய ஆரியம் பிறந்ததிலிருந்து தாழிக்குள் அடையும் வரை இன்றும் தமிழன் உள்ளிட்ட பெரும்பாண்மை இந்திய மக்களின் மனதில் வருணம், சாதி, சடங்கு,சம்பிராயாத சாமியாக உறைந்துள்ளது. சமணத்துறவிகள் கழுவேற்றப்பட்டதை,புத்த விகாரங்கள் தகர்க்கப்பட்டதை ஒரு வேடிக்கை யாக நம் முன்னவர்கள் காலத்தை சுழற்றியதைப்போல் இன்றி மார்க்ஸ்-எங்கெல்ஸ்-ன் கம்யுன் தத்துவம் முதலில் தன் குடும்பத்திலும், படிபடியாக சமூகம் முழுமையும் மக்கள் மனதில் உறைவதற்கு உண்மையாய் செயல்படுவதே, பகுத்தறிந்து பேசி எழுதியதற்காக தன் நாட்டைவிட்டு குடும்பத்தோடு வெளியேற்றப்பட்ட கார்ல் மார்க்ஸ்க்கு நாம் செலுத்தும் மரியாதையாகும்.



-அருள்சந்,திருச்சி,22-07-2020